★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஆவணி 7உ புதன் (22—8—56) ★ ★ வெளியூர்: ஆவணி 8உ வியாழன் (23—8—56) [இதழ் 62

புதிய எளிய இராட்டை!

★

கோட்டயம்—

நல்ல உற்பத்தி சக்தியும் எளிய அமைப்பு முறையும் கொண்ட புதியதொரு இராட்டை இங்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

ஆதிமக்குஞ்சு என்ற 40 வயதான முஸ்லிம் ஒருவர் இதனைக் கண்டுபிடித்துள்ளார்.

8 மணி நேரம் இந்த இராட்டையில் நூற்பதின் மூலம் 7,200 கெஜம் நூல் உற்பத்தி செய்யலாமாம்!

ஓடி வருமாறு டில்லி 'கண்சாடை' காட்டுகிறது?

20,000 பேர் வேலையிழப்பர்

மக்கள் சபை முன்பு தாமோதர் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்

தாமோதர் திட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்த சுமார் 20,000 பேர் வேலை இழப்பர் என்பதை எடுத்துக் காட்டி, அவர்களில் நூறு பேர் அடங்கிய கூட்டம் ஒன்று, தங்கள் கோரிக்கைகளடங்கிய மகஜர் ஒன்றை பிரதமரிடம் தருவதற்காக என். வி. காட்கில், டாக்டர் லங்காசுந்தரம் ஆகிய மக்கள் சபை உறுப்பினர்களிடம் தந்திருக்கின்றனர்.

மகஜரில், தொழிலாளரில் எவரும் வேலையில்லாது நிண்டாடவிடக் கூடாது என்றும், அவர்களுக்கு மாற்று வேலை தேடித்தர வேண்டும் என்றும் கோரியிருக்கின்றனர்.

இவர்கள் துவக்கத்தில், மக்கள் சபை முன் ஆர்ப்பாட்டமும் நடத்தினர்.

ஈயம், செம்புத் தாதுப் பொருள்கள்

இமாலய மலையில் கிடைக்குமா?

லக்னோ, ஆக. 21—

இந்தியாவில் மிகக் குறைந்த அளவில் கிடைக்கின்ற செம்பு, ஈயம்போன்ற தாதுப் பொருட்கள், உத்திரப் பிரதேசத்திலுள்ள இமாலய மலைத் தொடர்களில் கிடைக்குமா என்பது குறித்து விரிவான பரிசோதனைகள் நடத்தவேண்டுமென மத்திய அமைச்சர் கே. டி. மாளவியா வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

திட்டம் திட்டம் என்பது தேர்தல் பிரச்சாரமே!

வேலையற்றோர் பிரச்சினை தீரவில்லை!

தொழில் நுணுக்கம் கற்றவர்களும் தொல்லைக்காளாகின்றனர்

தாமோதர் பள்ளத்தாக்கு திட்டத்தின் பயனின்மை அம்பலம்

"தாமோதர் பள்ளத்தாக்கு திட்டத்தில் வேலை செய்துகொண்டு வரும் 22,000 தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்ட முயற்சி நடந்துகொண்டு இருக்கிறது. அவர்களில் 80 சதவிகிதத்தினர் பலவகைப்பட்ட தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றிருப்பவர்களாவர்.

இதுபற்றி, அங்குள்ள ஊழியர் சங்கத் தலைவர் எஸ். ஆர். சென் குப்தா என்பவர் விளக்கம் தந்துள்ளார்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது. தொழில் நுணுக்கம் பயின்றிருப்பவர்களுக்கு எங்கும் தேவை இருக்கிறது. ரூர்கேலா, பிலாய், துர்காபூர் போன்ற பெரும் பெரும் இரும்பு உருக்குத் தொழில்களும் நீர்த்தேக்க அணைகளும் செயலாற்றப்பட்டு வருகின்றன. இத்தகு சூழ்நிலையில் முதல் முதலாக மேற்கொள்ளப்பட்ட பள்ளத்தாக்கு திட்டத்தில் சிறந்த தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றுள்ளவர்களைப் பயன்படுத்திக் கொள்ளாது, வெளியேற்ற முயற்சிக்கப்படுகிறது."

தொடர்ந்து சென் குப்தா குறிப்பிட்டிருப்பதாவது :—

"1956 மார்ச் முதல் தேதியில் 800 ஊழியர்களை வெளியேற்றினதின் மூலம் ஆள்குறைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இன்று ஏற்பட்டு இருப்பதுபோல் அந்த ஆள்குறைப்பு 2,200 ஊழியர்களை வெளியேற்றிய கட்டத்தில் வந்திருக்கிறது. மேலும் 20,000 தொழிலாளர்களை வெளியேற்றுவது என மேற்படி திட்ட நிர்வாகக் குழு முடிவுகட்டி இருக்கிறது; அரசாங்கமும் துவக்கக்கட்ட வேலை முடிவுற்றுவிட்டால் ஆள் குறைப்புக்கு அவசியம் இருக்கிறது என குறிப்பிட்டு இருக்கிறது.

"அரசாங்கத்தின் இக்கருத்தை—அதாவது வேலையின் முதல் கட்டம் முடிவடைந்துவிட்டது என்பதை, ஒப்புக்கொள்ளாது ஊழியர் சங்கச் செயலாளர், 'திட்டத்தின் இரண்டாவது அங்கமாக, பால்பாரி, அய்யார், பொகாரோ, பெர்மோ முதலிய இடங்களில் அணைக்கட்டுகளும் நீர் மின்சார உற்பத்தி நிலையங்களும் அமைப்பது என ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது; அவைகள் கைவிடப்பட்டு, துர்காபூரில் ஒரு எரி மின்சார உற்பத்தி நிலையமும், பொகாரோவில் ஒரு நிலையமும் நிர்மாணிப்பது என முடிவு கட்டி இருக்கிறது திட்ட நிர்வாகக் குழு.

"இந்த இரண்டு திட்டங்களும் உடனடியாக மேற்கொள்ளப்பட்டால் 20,000 தொழிலாளர்களை வெளியேற்றுவதற்கான நிலைமை ஏற்படுவதற்கில்லை; அப்பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தங்கள் செய்துகொண்டு இருந்துங்கூட, வேலையை 1957 சனவரியிலேயே துவங்குவது என நிர்வாகக் குழு தீர்மானித்து இருக்கிறது.

"ஒருவகையில் ஆட்குறைப்பு செய்யப்பட்டபோதிலும் அவர்களை வேறு ஒருவகையில் பயன்படுத்திக் கொள்வது இயலும். இந்த உண்மைகள், ஆட்குறைப்பு அவசியமற்றது—தக்கக் காரணமற்றது என்பதை மெய்ப்பிக்கின்றன.

"இரண்டு ஆண்டுக்காலத்திற்கு எந்தவித ஆட்குறைப்புக்கும் அவசியம் ஏற்படாது என டி. வி. சி நிர்வாகக் குழு தலைவர் அறிவித்திருந்தார். திட்டத்தின் வெற்றிக்கு உழைத்தவரும் எந்த ஒரு ஊழியரும் வெளியேற்றப்படமாட்டார் என மக்கள்சபையில் திட்ட அமைச்சர் அறிவித்திருந்தார்; மெய்தான் அணைக்கட்டைப் பார்வையிட வந்தபோதும் திட்ட மந்திரி, அதிகப்படியாக இருக்கும் 2,000 ஊழியர்களை பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்து முடித்துவிட்டதாகவும் கூறி இருந்தார்" என்று குறிப்பிட்டார்.

அகதிகளை வரவேற்க 29 புதிய முகாம்கள்

ரூ. 192 இலட்சம் செலவில் தொழில் திட்டங்கள்

ஓட்டுரிமை வழங்கவும் உடனடி ஏற்பாடு

ஓடிவருவோரின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் அதிகரிப்பதேன்?

புதுடில்லி, ஆக 20—

கிழக்கு பாகிஸ்தானிலிருந்து அகதிகள் என்ற பெயரில் இந்தியாவிற்கு ஓடிவரும் இலட்சக்கணக்கானவர்களுக்கு நிலையான வாழ்வு தருவதில் டில்லி சர்க்கார் காட்டிவரும் அக்கறை நாளுக்கு நாள் வளர்ந்த வண்ணமுள்ளன.

ஓடிவருவோருக்கு டில்லிதரும் வரவேற்பு, உருவாக்கித்தரும் நிலையான வாழ்வு இவை எல்லாம், மேலும் பல இலட்சக்கணக்கான பேர்களைப் பாகிஸ்தானிலிருந்து ஓடிவருமாறு தூண்டிய வண்ணமுள்ளன என்றால், அது மிகையாகாது.

வங்கத்தில் சுமார் ரூ. 187 இலட்சம் செலவில், 8,500 அகதிகளுக்கு நிரந்தர வேலை தேடித் தருவதற்கான 12 திட்டங்களை டில்லி நிறைவேற்றவிருக்கிறது.

ஒவ்வொன்றிலும் 1,200 அகதிகளுக்கு வேலை கிடைக்கும் என்ற வகையில், நான்கு நூற்பு ஆலைகள் துவங்க டில்லி திட்டமிட்டிருக்கிறது. 1,500 பேருக்கு வேலை தரும் பஞ்சாலை ஒன்றும் நிறுவப்படும் எனத் தெரிய வருகிறது.

இதற்கிடையில், முதல் ஆறு மாதங்களில் மட்டும் கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 2 இலட்சம் பேர் அகதிகளாக ஓடி வந்துள்ளனராம்.

1954-ல், மாதந்தோறும் ஓடி வந்து கொண்டிருந்தோரின் எண்ணிக்கை, 10,000; 1955-ல் இது 20,000; இப்போது 1956-ல் 33,000 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறதாம்.

1956, ஜுன் 30-ந் தேதிய கணக்குப்படி கிழக்கு மாநிலங்களில் மட்டும் குடியேறியுள்ள அகதிகளின் மொத்த எண்ணிக்கை 38,70,000 ஆகும்.

இப்போதுள்ள ஏற்பாடுகள் போதாது என்று மேலும் புதிதாக அகதிகளை வரவேற்பதற்காக 29 முகாம்களை டில்லி சர்க்கார் திறந்து வைத்திருப்பதின் மூலம், பாகிஸ்தானில் உள்ள இந்துக்களை 'இங்கே வாருங்கள்; வந்துவிடுங்கள்' என்று 'கண்சாடை' காட்டிக்கொண்டிருக்கின்றனராம்!

மேலும், இந்தியக் குடியுரிமைச் சட்டப்படி, வரும் அக்டோபர் 81-ந் தேதிக்குள் தங்களைப் பதிவு செய்து கொள்ளுமிடத்து எல்லா அகதிகளுக்கும் வாக்குரிமை அளிக்கவும் டில்லி முடிவு எடுத்துள்ளதாம்.

இதற்காகவே மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தைத் திருத்துவதற்காக இப்போதைய மக்கள் சபைக் [illegible] டத்தி லேயே [illegible] ஒன்று தாக்க[illegible]தாம்.

மொரார்ஜியின் உண்ணுவிரதம்

'அடிப்படைக் காரணம் எதுவும் இல்லை'

மாணவர் தலைவர் விளக்கம்

அகமதாபாத், ஆக. 21—

"பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் உண்ணுவிரதம் மேற்கொண்டதற்கான காரணம் எந்த அடிப்படையையும் கொண்டதல்ல"

என்று, இங்குள்ள மாணவர் தலைவர் ஒருவர் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்.

"மொரார்ஜி தேசாய் பேசுவதாக இருந்தப் பொதுக்கூட்டத்தில் அவர் சொற்பொழிவைக் கேட்கக்கூடாது எனப் பொதுமக்களை மாணவர்கள் எவ்வகையிலும் தடங்கல் செய்யவில்லை; அதற்கும் மாணவர்களுக்கும் எவ்விதச் சம்பந்தமும் கிடையாது" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

"தலைவர்களுக்கும் மக்களுக்கும் இடையே ஒருவகையான 'வெண் திரை' போட்டு வருகிற அங்குள்ள சில காங்கிரஸ் கூட்டத்தவரால், பிரதமர் பண்டித நேருவும் முதலமைச்சர் மொரார்ஜி தேசாயும் தவறான பாதையில் அழைத்துச் செல்லப் பட்டுவிட்டனர்"

என்றும் அம்மாணவர் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

★

அமைச்சருக்குக்

'கருப்புக் கொடி வரவேற்பு'

அகமத்நகர், ஆக. 22—

'பம்பாய் இருமொழி மாநில அமைப்புக் கூடாது' என்ற எதிர்ப்புக் கோஷங்களை முழக்கிக் கொண்டு சுமார் 12 சம்யுக்த மகாராட்டிர சமிதி ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள், பம்பாய் ரெவினியூ அமைச்சர் பி. எஸ் ஹிரே இங்கு வந்தபோது அவருக்கு முன்பாகக் கூடி, 'கருப்புக் கொடி வரவேற்பு' வழங்கியிருக்கின்றனர்.

அகமத்நகர் கலெக்டர் அவர்களிடம் நேரில் வந்து பேசின பின்னரே ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனரெனத் தெரிகிறது.

★

3,000 மாணவர்கள் கண்டன ஊர்வலம்

பரோடா, ஆக 21—

பெரிய பம்பாய் இருமொழி மாநில அமைப்பினை ஏற்றுக் கொண்டு குசராத் பிரதேசக் காங்கிரஸ் கமிட்டி மேற்கொண்ட தீர்மானத்திற்குத் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்து, பரோடாவிலுள்ள மகாராஜா சயாஜிராவ் பல்கலைக் கழக மாணவர்களடங்கிய கூட்டம் ஒன்றில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

'தனி குசராத் மாநிலம் தேவை' என்றும் அம்மாணவர் கூட்டத்தவர் மற்றொரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனர்.

அங்கு விதிக்கப்பட்டிருந்தத் தடையுத்தரவைக் கண்டித்து, சுமார் 3,000 பல்கலைக் கழக மாணவர்கள் ஊர்வலமாக அணி வகுத்துச் சென்றிருக்கின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—8—'56 புதன்

தேசாய் 'இனப்பற்று'!

"உண்ணாநோன்பில் எனக்கு நம்பிக்கை கிடையாது. ஆனால், குசராத், இன்று தன்னைத்தானே அழித்துக் கொள்வதைக் காண்கிறேன். அதன் அழிவிற்கு முன் நான் இறந்து விடுவதே நலம்."

இவ்வாறு குறிப்பிட்டுவிட்டு, உண்ணாநோன்பை ஏற்றுக் கொண்டு இருக்கிறார் பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய். உண்ணா நோன்பில் தனக்கு நம்பிக்கை எந்தவகையிலும் அறவே கிடையாது என அவர் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

உண்ணாநோன்பின் விளைவுகளில் துளியும் நம்பிக்கை இல்லாத ஒருவர், அவ்வாறு நம்பிக்கையின்மையையும் வெளிப்படையாக விளம்பரப்படுத்திக் கொண்டே உண்ணாநோன்பை மேற்கொள்ள முனைந்திருப்பது, மொரார்ஜி தேசாய் போன்ற நீண்டநாள் பயிற்சி பெற்றுள்ள காங்கிரஸ் கட்சியினரால்தான் இயலுமே அல்லாது மற்றவர்களால் இயலக் கூடியதாகாது.

உண்ணாநோன்பின் விளைவுகளில் நம்பிக்கை இல்லை எனத் தெளிவுபடுத்திவிட்டு, அதே உண்ணாநோன்பை மொரார்ஜி தேசாய் மேற்கொண்டிருப்பது முழுதும் கொள்கை முரண்பாடு உடையதாகும் என்பது சொல்லாமலே விளங்கும். இருந்தாலும் தேசாய் உண்ணாநோன்பு ஏற்றுக்கொண்டு இருக்கிறார்! விசித்திரமான வாதம்! அதி விசித்திரமான செயல்!

'குசராத் தன்னைத்தானே அழித்துக்கொள்கிறது. அது அழிவதற்குள் நான் இறந்து விடுவதே நல்லது' என தேசாய் குறிப்பிட்டிருப்பதிலிருந்து, தம்முடைய சொல்லுக்குக் கட்டுப்படாத அல்லது தம்முடைய பேச்சை அலட்சியம் செய்கிற குசராத் மக்களிடை தாம் உயிரோடு இருக்கக்கூடாது என முடிவு கட்டிவிட்டவராகவே அவர் காணப்படுகிறார். அவருக்குள்ள இம்மனப்போக்கில் பயங்கரமான சில உண்மைகள் மறைந்திருக்கின்றன.

தேசாய் பேச்சைக் கேட்க குசராத் மக்கள் மறுத்துவிட்டதையா, அல்லது காங்கிரஸ் மேலிடத்துடையவும் மக்கள் சபையுடையவும் இருமொழி மாகாணத் தீர்ப்பை ஏற்க மறுத்துவிட்டதையா, அல்லது முடிவு கேட்டுப் 'பலாத்கார'ச் செயலை மேற்கொண்டதையா, அல்லது எதைக் கொண்டு, குசராத் தன்னைத்தானே அழித்துக் கொண்டு இருக்கிறது என தேசாய் முடிவு கட்டிக் கூறுகிறார் என்பது ஆராயத்தக்கது.

மக்கள் சபையின் தீர்ப்பைக் கேட்டதும் கொதித்தெழுந்த குசராத் மக்கள் 'பலாத்கார'த்தில் ஈடுபட்டதைத்தான் குசராத் தற்கொலையில் ஈடுபட்டிருப்பதாக அவ்வாறு முடிவு கட்டிக்கொண்டதாக இருந்தால், துளியும் தயக்கம் காட்டாது சம்பவம் நடந்து கொண்டு இருந்த நேரத்திலேயே, அவர் உண்ணா நோன்பை மேற்கொண்டு செத்துமடியத் துணிந்திருக்க வேண்டும். ஆனால், தேசாய், அப்பொழுது அத்தகு முயற்சியை மேற்கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல — கருதிப் பார்க்கவுமில்லை என்றுகூடக் கூறலாம்.

குசராத் மக்களின் எழுச்சி கண்டதும் தேசாய் உண்ணா நோன்பு இருந்து அவ்வெழுச்சியைத் தணியச் செய்ய முயற்சித்திருக்க வேண்டும். அதுவே காந்தீய அறப்போர் 'புனித' வழியுமாகும்.

ஆனால், அதுகாலை அக்காந்தீய முயற்சியில் ஈடுபடத் தவறியதுடன் மட்டுமல்லாது, கிளர்ந்தெழுந்த குசராத் மக்கள் மீது, ஆண் என்றும் பெண் என்றும் பாராமல், வயோதிகர் சிறுர் என்றும் கருதாமல் குண்டுமாரி பொழிந்து, பலரைக் கொன்று குவிப்பதில் கடுகத்தனை இரக்கமும் காட்டாது, இரத்த வெறி பிடித்த அதிகாரப் பேயாக மொரார்ஜி தேசாய் காட்சி அளித்தார். எனவே, குசராத் தற்கொலையில் ஈடுபட்டிருக்கிறது என அவர் முடிவுகட்டிக் குறிப்பிடுவது, அந்த மக்கள் நேரடியாகக் கிளர்ச்சி செய்திருப்பதை அல்ல என்பது தெளிவாகிறது.

தம்மைத் துச்சமெனமதித்து, தாம் பேச இருந்தக் கூட்டத்திற்கு குசராத் மக்கள் வேண்டுமென்றே வராது இருந்ததைத்தான், குசராத் தற்கொலையில் ஈடுபட்டு இருக்கிறது எனத் தேசாய் குறிப்பிட்டிருக்கிறார் என்றே முடிவுகட்டிக்கொள்ள வேண்டியதாகிறது.

என்ன பொருள் இதற்கு? இவ்வாறு தேசாய் பொருள் கொள்ளும் போக்கில் மறைந்து கிடக்கும் உண்மை என்ன?

தம் சொல்லைக் கேட்கவும் அதன்படி நடக்கவும் குசராத்திய மக்கள் முன்வந்தால், அதைத் தாங்கள் வாழ குசராத் மக்கள் மேற்கொள்ளும் சிறந்த மார்க்கம் என தேசாய் ஒப்புவார்—உலகுக்கு அறிவிப்பார். ஆனால், தம்மை அலட்சியப்படுத்தினால், தம்மை வெறுக்கத் துணிந்தால், குசராத் தற்கொலை செய்து கொள்வதில் ஈடுபட்டு இருப்பதாக தேசாய் முடிவு கட்டி விடுவார்! அதை மாற்றத் தற்கொலை செய்து கொள்ளப் போவதாக உண்ணா நோன்பு மேற்கொண்டு, குசராத் மக்களை மிரட்ட முன்வருவார்! அருமையான அரசியல் நடைமுறை!

குசராத் மக்களின் போக்கு கண்டு, குசராத் தற்கொலையில் ஈடுபட்டு இருப்பதாகவும் அது அழிவதற்கு முன் தாம் சாவதே நலம என்றும் வெளிப்படையாகக் கூறிவிட்டு உண்ணா நோன்பை மேற்கொள்ள முன்வந்த மொரார்ஜி தேசாய், மராட்டியர்கள் பம்பாய் நகருக்காகக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்த நேரத்தில், இம்முறையை மேற்கொள்ள முன்வராதது ஏன்? குசராத் மக்களும், மராட்டிய மக்களும் மொரார்ஜி தேசாயை முதலமைச்சராகக் கொண்டிருப்பவர்கள்தானே? மராட்டியம் அழிந்தாலும் தமக்கு அக்கரை இல்லை; குசராத் அழிந்துவிடக் கூடாது; அவ்வாறு அழிவதைத் நம்மால் பார்த்து சகித்துக் கொள்ள முடியாது; தற்கொலை செய்துகொண்டு மடிவதே மேல் எனப் பொருள் கொள்ளும்படியாக அல்லவா தேசாயின் சொல்லும்செயலும் அமைந்து இருக்கிறது?

தமது ஆட்சியின் கீழ் இருக்கின்ற மக்களில் ஒரு சாராராகிய மராட்டிய மக்களைக் குறித்து ஒரு மாதிரியாகவும், தமது சொந்த மொழி மக்களான குசராத்தியரைப் பற்றி வேறு மாதிரியாகவும் கருதி செயல்படுகிற தேசாயிடம், பிற மாவட்டத்திலிருக்கும் வேறு மொழி—இன மக்கள் எவ்வாறு நம்பிக்கைகொள்ள முடியும்?

இந்தியக் கலாச்சாரம்—பண்பாடு — மனப்போக்கு என்றெல்லாம் யானை கண்ட குருடர்கள்போல் பேசும் அகில இந்தியத் தலைவர்கள், பம்பாய் முதலமைச்சர் தேசாய் அவர்களின் ஓரவஞ்சனைப் போக்கு கண்டு எழும் நியாயமான வினவிற்கு விளக்கம் தரவேண்டும். தருவார்களா? கண்டிப்பாகத் தரமாட்டார்கள்!

குறைந்த வருவாயுள்ள குடும்பப் பெண்கள்

துணை வருவாய் பெறுவதற்கு முயற்சிக்கப்படுகிறது

புதுடில்லி, ஆக. 21—

குறைந்த வருவாயுள்ள குடும்பப் பெண்களுக்கு, துணை வருவாய் கிடைப்பதற்கு உதவியளிக்கும் பொருட்டு, தவணைக் கிரய அடிப்படையில் தையல் இயந்திரங்களை விநியோகம் செய்வதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

துவக்கத்தில் சில குறிப்பிட்ட இடங்களில்தான் இத்திட்டம் பரீட்சித்துப் பார்க்கப்படும்; இத்திட்டத்தின்கீழ் உற்பத்தி நிலையங்களும் துவக்கப்படும்; அங்கே தையல் இயந்திரங்கள் பெற்றுக்கொண்டுள்ள பெண்கள் துணிகளைத் தயாரிப்பார்கள்: அப்பெண்களுக்காகக் கூட்டுறவு சங்கங்களும் அமைக்கப்படும்; ஒவ்வொரு நிலையத்திலும் அனுபவம் மிகுந்த துணிவெட்டும் நிபுணர் ஒருவர் அப்பெண்களுக்குப் பயிற்சியளிப்பார்.

ஒரு தையல் இயந்திரத்துக்கு முதலில் சுமார் ரூ. 25 செலுத்த வேண்டும்; மீதித் தொகையை மாதத் தவணைகளில் செலுத்தலாம்.

முன்னாள் மன்னர்கள் சொத்துக்களை கடத்துகின்றனரா?

தனக்கொன்றும் தெரியாது என்கிறார் மத்திய மந்திரி

புதுடில்லி, ஆக. 20—

அயல் நாடுகளில் குடியேறும் நோக்கத்துடன் சில முன்னாள் மன்னர்களான சமஸ்தான அதிபர்கள் தங்கள் சொத்துக்கள் அனைத்தையும் வெளிநாடுகளுக்கு மாற்றிக் கொள்வது பற்றித் தமக்கொன்றும் தெரியாதென்று, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மக்கள் சபையில் அமைச்சர் ஏ. சி. குகா தெரிவித்திருக்கிறார்.

கடந்த 1947-ல் ஏற்படுத்தப்பட்ட அயல் நாட்டு நாணய மாற்றுப் பரிவர்த்தனை சட்டத்தின் கீழ், இந்திய ரிசர்வ் பாங்கியின் முன் அனுமதியின்றி, சொத்துக்களை மாற்ற இயலாதென்றும் மீறி மாற்றுவதாக இருந்தால் அபராதமும் இரண்டாண்டுக் கால சிறைத் தண்டனையும் விதிக்கச் சட்டம் இருக்கிறதென்றும், ரிசர்வ் பாங்கி அயல்நாட்டுச் செலாவணி வசதிகளைச் சிதறடிக்காது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவில் 1956-56-ல் மொத்தம் 1,820 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன; 965 குழாய்க் கிணறுகள் இயக்கப்பட்டன.

'கோவில்களுக்கு நிலதானம் தருவது பெரும் பாவமாகும்'

ஆச்சாரியா விநோபா பாவே கருத்து

சென்னை, ஆக. 20—

"இன்று கோவில்களுக்கும் மடாதிகளுக்கும் நிலம் தானம் தருவது ஒரு பெரும் பாவமாகும்"

என்று, சேலம்—பாப்பாரப்பட்டியில், ஆச்சாரியா விநோபா பாவே கூறியிருக்கிறார்.

"அந்தக் காலத்தில் நிலப்பஞ்சம் இருக்கவில்லை; மக்கள் தொகையும் பெருகியிருக்கவில்லை. எனவே, கோவிலுக்கு நிலம் வழங்குவது நியாயமாயிருந்திருக்கலாம்.

"தங்களை வளப்படுத்திக்கொள்வதற்காக விவசாயிகளைச் சுரண்டிய ஜமீன்தார்களைப் போலவேதான் இன்று கோவில்களும் உள்ளன.

"நிலத்தில் வாழ்பவர்களையே கோவில் சுரண்டுமானல், அந்தக் கோவிலுக்கு நிலம் வழங்குவது பெரும் பாபமாகும்"

என்றும் விநோபா பாவே குறிப்பிட்டிருக்கிறார்.

தொழிலாளர்களின் முன்னணி

கோரிக்கைகளை ஈடேற்ருவிட்டால் 75,000 பேர் வேலை நிறுத்தம் செய்வர்

ஐதராபாத், ஆக. 20—

ஐதராபாதத்தில் சோஷலிஸ்டு மஜ்தூர் சங்கம், கம்யூனிஸ்டுத் தொழிற்சங்கக் காங்கிரஸ் ஆகியவற்றுடன் இணைந்தோ உறவு கொண்டோ உள்ள சுமார் 50 தொழில் யூனியன்களைச் சேர்ந்த தொழிலாளர்கள், வருகிற செப்டம்பர் 17-ந் தேதிக்குள் சர்க்கார் தங்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால் தாங்கள் வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளப்போவதாக அறிவித்திருக்கின்றனர்.

இந்த 50 தொழில் யூனியன்களிலுமாக மொத்தம் 75,000 தொழிலாளர் உள்ளனர் என்றும், 20-ந் தேதியன்று நடைபெற்ற இந்த யூனியன்களின் கூட்டு மாநாட்டினில் ஊதிய உயர்வுக்கான குறைந்தபட்சக் கோரிக்கைகள் தயாரிக்கப்பட்டு, அக்கோரிக்கைகளை வருகிற 17-ந் தேதிக்குள் சர்க்கார் ஏற்றுக்கொள்ளாவிட்டால் வேலை நிறுத்தம் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

வசதிகளை அதிகரிக்கக்கோரி 300 மாணவர்கள் ஊர்வலம்

மைசூர், ஆக 20—

கல்லூரிச் சிப்பந்திகள், சாதனங்கள், கிளினிகல் வசதிகள் போன்றவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற கோரிக்கை முழக்கத்துடன், மைசூரிலுள்ள ஆயுர்வேத, யுனானி மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த சுமார் 300 மாணவர்கள், வகுப்புகளுக்குச் செல்லாமல் ஊர்வலம் வந்ததாகக் கூறப்படுகிறது.

மேலும் அம்மாணவர்கள், சர்க்கார் தங்களுடைய எல்லா கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தரும் வரையில் கல்லூரிக்குச் செல்லப் போவதில்லை எனவும் தீர்மானித்துள்ளனராம்.

தலைவர் தேர்தலுக்கு நிற்கமாட்டாராம்!

புதுடில்லி, ஆக. 20—

டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்கள் மீண்டும் இந்தியக் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு நிற்க மாட்டாரெனத் தெரியவருகிறது.

அவர், கடந்த ஆண்டிலேயே தம் பதவியை விட்டுவிட்டு ஓய்வு பெற நினைத்ததாகவும், ஆனால் பிரதமர் நேருவும், மற்றும் பல தலைவர்களும், அவரைத் தொடர்ந்து பதவி வகித்து வருமாறு கேட்டுக் கொண்டதின் பேரிலேயே அவர் தம் பதவிக் காலம் முடியும்வரையில் தாம் பதவி வகித்து வர ஒப்புதல் தந்ததாகவும் கூறப்படுகிறது.

முந்திரிக்கொட்டை உற்பத்தி

புதுடில்லி, ஆக. 21—

"திரு—கொச்சியில் முந்திரிக் கொட்டை உற்பத்தி குறைந்திருப்பதற்குக் காரணம், வழக்கமாக முந்திரி சாகுபடியாகும் நிலங்கள் வளம் குன்றியிருப்பதும், செடிகளுக்கிடையே போதிய அளவு இடைவெளி இல்லாமலிருப்பதும், நல்ல ரக விதைகள் விதைக்கப்படாததும்தான்.

"சென்னை, திரு-கொச்சி, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் முந்திரிப்பயிர் அபிவிருத்திக்கான பல்வேறு திட்டங்களுக்கு அங்கீகாரமளிக்கப்பட்டிருக்கிறது. மிக அதிக மகசூலைக் கொடுக்கக்கூடிய பயிர்களை உண்டாக்குவதற்கான நுட்ப முறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன," என்று, மக்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது.

இரயில் நிலைய அதிகாரிகள் பதவியில் மாறுதல்?

சர்க்கார் நிலைபற்றி தகவல்

புதுடில்லி, ஆக. 20—

இந்திய இரயில்வேக்களில் உள்ள இரயில் நிலைய அதிகாரிகள் (ஸ்டேஷன் மாஸ்டர்கள்), துணை அதிகாரிகள் பதவிகளில் சில மாறுதல்களைச் செய்ய சர்க்கார் உத்தேசித்திருப்பதாயும், உயர் பதவிகளின் எண்ணிக்கைகளை அதிகரிக்கவே இம்மாறுதல்கள் மேற்கொள்ளப்படுமெனவும் மாநிலங்கள் சபையில் உதவி இரயில்வே அமைச்சர் அளகேசன் அறிவித்திருக்கிறார்.

இத்திட்டம் அமுலாக்கப்படும் முன்னர், இந்திய இரயில்வே தேசிய சம்மேளனத்தினர் இதனை விவாதிக்கலாம் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் இரயில் நிலைய அதிகாரிகள், உதவி அதிகாரிகள் ஆகியோர் தங்களுக்கு ஊதிய விகிதங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்ட கோரிக்கையைச் சர்க்கார் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவில்லை என்று தெரிவித்திருக்கிறார்.

தெரிந்து கொள்ளுங்கள்!

புதுடில்லி, ஆக 20—

மேற்கு வங்கத்திலுள்ள பொய்ப்பல் உற்பத்திசாலையும், டில்லியிலுள்ள ஒரு தொழிற்கூடமும் பொய்ப் பற்களைத் தயாரித்து வருகின்றன எனவும், பொய்ப் பற்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றி கல்கத்தாவில் உள்ள மத்திய கண்ணாடி மண்பாண்ட ஆராய்ச்சிக் கழகத்தில் ஆராய்ச்சி வேலை நடைபெற்று வருகிறது என்றும் மாநிலங்கள் சபையில் தகவல் தரப்பட்டுள்ளது.

சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகம்

தூதுக் குழு முதலமைச்சர் காமராசரை சந்தித்தது

சென்னை, ஆக. 20—

இன்று பகல் 12 மணிக்கு, சென்னைக் கோட்டையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத்தின் தலைவரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியருமாகிய டாக்டர் அ. சிதம்பரநாதன் அவர்கள் தலைமையில், தமிழாசிரியர் எண்மர் கொண்ட ஒரு தூதுக்குழு முதலமைச்சரைச் சந்தித்து, சென்ற ஏப்ரலில் தஞ்சையில் நடந்த மாநிலத் தமிழாசிரியர் கழகத்தின் முடிவுகளை நேரில் எடுத்துச்சொன்னார்கள்.

தமிழாசிரியரின் தகுதி பற்றியும், சம்பளத் திட்டத்தில் உள்ள ஏழுக்கு மேற்பட்ட வேறுபாடான திட்டங்களைப் போக்கி இடத்திற்கேற்ற முறையில் திருத்தி அமைக்க வேண்டிய அவசியம் பற்றியும் அமைச்சரிடம் எடுத்துக் கூறினர்.

தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கவும், திருவள்ளுவருக்குத் திருநாள் விடுமுறை விடவும் வற்புறுத்தினர்.

குழுவினரின் வேண்டுகோளைக் கவனித்து விரைவில் ஆவன செய்வதாகக் கூறியிருக்கிறார் முதலமைச்சர்.

சென்னை— பெத்துநாய்க்கன்பேட்டை மக்கள் மன்றம்

19—8—56 காலை மேற்படி மன்றத்தின் சொற்பயிற்சிப் பகுதி துவக்கப்பட்டது. கூட்டத்திற்குத் தோழர் எஸ். சந்திரசேகரன் தலைமை வகித்தார். தோழர்கள் சி. பன்மொழியன், என். இராகவேலு, சி ஆர். பாலசுந்தம், அரு. சக்கரபாணி, இலட்சுமிபதி ஆகியோர் 'பேச்சுக்கலை' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றினர்.

மேற்படி மன்றத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும் என மன்றச் செயலாளர் அறிவித்துக் கொள்கிறார்.

சேவூர்—ஆரணி (வ. ஆ.) அழகிரி மன்றம்

18-8-56 இரவு 8-30 மணிக்கு, மேற்படி மன்றச் செயற்குழுக் கூட்டம், தோழர் எஸ் ஏ. கைலாசன் தலைமையில் நடைபெற்றது. மத்திய சர்க்காரின் விசைத் தறி புகுத்தும் முறைக்கு கண்டன அறிக்கை வெளியிடுவதெனவும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

'நம் நாடு' இதழுக்கு அன்பளிப்பு

வ ஆ மாவட்டம் சி. கோர்ப்பனந்தல் தி. மு. கழகத் தோழர்கள் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2-4-0 நன்கொடை தந்துள்ளனர்—வரப்பெற்றோம் — நன்றி— பொறுப்பாளர்.

பிறப்பு

சென்னை மந்தவெளி தோழர் முத்துக்கூத்தன் அவர்களது துணைவியார் தோழியர் மரகதம் அவர்கள், 11—8—56ல் ஒரு பெண்மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 3 நன்கொடை தரப்பட்டது— வரப்பெற்றோம் – நன்றி – பொறுப்பாளர்.

* * *

தென் ஆற்காடு மாவட்டம் பாலக்காடு தி. மு. கழகத் தோழர் வி. கருப்பசாமி அவர்களது துணைவியார் தோழியர் இராசாம்பாள் 10—8—56ல் ஓர் பெண் மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றி— பொறுப்பாளர்.

பல கட்ட விற்பனை வரிக்கு எதிர்ப்பு

ஆத்தூரில் பொதுக்கூட்டம்

ஆத்தூர், ஆக 11—

பல கட்ட விற்பனை வரியை எதிர்த்து, அரூர் ரேடியோ மைதானத்தில் திரு. ஆர். சென்னி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது திரு. வி. வி. நாதன், ஆர். பலராம், எம். கான்சாகிப், ஏ. முனுசாமி ஆகியோர் பேசினர்.

பல கட்ட விற்பனை வரி சிறு வியாபாரிகளின் வாழ்வை நாசமாக்குகிறது என்றும், விற்பனை வரி அதிகாரிகள் அநியாயமாக வரி விதிப்பதால் வியாபாரிகளுக்குப் பெருங்கேடு விளைவிக்கிறது என்றும், எனவே, இந்த வரி முறையை மாற்றி ஒரு முனை விற்பனை வரியையே அமுல் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு மாநில மருத்துவர் மத்திய சங்கம்

"சென்னையில் நடைபெறவிருக்கும் சங்கத்தின் மாநில மாநாடு ஒத்திவைக்கப்பட்டு 1956 அக்டோபர் மாதத்தில் நடத்துவதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த வட்டங்களிலுள்ள மருத்துவர் குல அன்பர்கள் மாநாடு சம்பந்தமான வேலைகளைக் கவனித்து ஒத்துழைப்பதோடு அடியிற்கண்ட முகவரிக்குத் தொடர்பு வைத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன்" என்று தமிழ் நாடு மருத்துவர் மத்திய சங்கச் செயலாளர் தோழர் எம். ஏ. இராமகிருஷ்ணன் அறிவிக்கிறார்.

முகவரி: எம். ஏ இராமகிருஷ்ணன், பொதுச்செயலாளர், 5/81 பிராட்வே, சென்னை.

விருதுநகரில் ஈ.வெ.கி. சம்பத்

விருதுநகர் பார்ப்பட்டித் தெருவிலுள்ள எம். எஸ் பெரியசாமி படிப்பகத்தின் 3-வது ஆண்டு விழா, மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

12—8—56 காலை $9\frac{1}{2}$ மணிக்கு நடைபெற்ற அவ்விழாவிற்கு தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். தோழர்கள் எஸ். இரத்தினம், அரங்கநாதன் ஆகியோர் சிறிதுநேரம் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் தோழர் சம்பத் அவர்கள், படிப்பகத்தின் அவசியம் குறித்தும், தனிப்பட்ட ஒரு கட்சியின் சார்பில் ஏன் படிப்பகங்கள் நடத்தவேண்டுமென்றும் விளக்கி, விருதுநகர் எம். எஸ். பெரியசாமி அவர்கள் பெருந்தனக்காரர் குடும்பத்தில் பிறந்தும் தனிப்பட்ட முறையில் சர்க்காரை எதிர்த்து வெற்றிகண்ட மாவீரர் என்றும், அவர் பெயரால் நிறுவப்பட்ட படிப்பகம், சில பத்திரிகைகளுக்கு ஏஜென்சி எடுத்து நேர்மையான முறையில் இயக்கி வருவது பாராட்டற்குரியதாகும் என்றும் குறிப்பிட்டார்.

அன்று மாலை 5 மணிக்கு, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் 'பழைய காஸ்மாலிட்டன் ஸ்போர்ட்ஸ் கிளப்'பில்தோழர் சுப்ரமணியம் தலைமையில்நடைபெற்ற தி மு. க. - மாணவர் கிளைக் கூட்டத்தில், 'மாணவர்கள் அரசியலில் பங்கு பெறுவது ஏன்?' என்பதற்கான விளக்கமும், எந்த முறையில் மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்வது என்பது பற்றியும் விரிவாகச் சொற்பெருக்காற்றினார்

பின்னர், அம்மாணவர் குழுத்துடன் அமர்ந்து தோழர் சம்பத் அவர்கள் புகைப்படமும் பிடித்துக் கொண்டார்.

இரவு 8 மணியளவில், அம்மன் கோவில் பொட்டலில் தோழர் எஸ். இரத்தினம் தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர் சம்பத் அவர்கள், தற்கால அரசியல் நிலை குறித்து விரிவாகப் பேசினார்.

தோழர்கள் அரங்கநாதன், வேலப்பன் ஆகியோரும் சிறிது நேரம் சொற்பொழிவாற்றினர்.

தோழர் சம்பத் அவர்களுக்கு, எம். எஸ் பி படிப்பகம், தி. மு. கழக அண்ணா மன்றம் ஆகியவை சார்பில் மலர் மாலையும், கைத்தறித் துண்டும் அணிவிக்கப்பட்டன.

(ந. - தி.)

சென்னையில் அண்ணா

நிகழ்ச்சிகள்

★

25—8—56 மாலை 6-மணிக்கு, சென்னை—33-வது வட்டம் சேத்துப்பட்டு இரயிலடிக்கருகில் (டி. பி. மருத்துவ மனைக்குப் பின்புறம்) நடைபெறும் கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்.

★

26—8—56 மாலை 6-மணிக்கு, சென்னை 18-வது வட்டம் புளியந்தோப்பு பார்த்தசாரதி நாயுடுதெரு பின்புறமுள்ள திடலில் நடைபெறும் 18-வது வட்ட தி. மு. கழக 6-வது ஆண்டுவிழா—மு. து. அருணசலம் நினைவு நூலகத் திறப்பு விழாப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்; தோழர் தி. சு. நல்லதம்பி தலைமை வகிப்பார்; தோழர் சா. கோ. நாராயணசாமி நூலகத்தைத் திறந்து வைப்பார்; தோழியர் டாக்டர் சத்தியவாணிமுத்து அவர்களும் சொற்பொழிவாற்றுவார்.

★

27—8—56 மாலை 6-மணிக்கு, சென்னை-வெள்ளாள தேனாம்பேட்டை வரசித்தி விநாயகர் கோவில் தெருவில், (போலீஸ் ஸ்டேஷன் எதிரில்) நடைபெறும் தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழகத் துவக்க விழாவில் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவார்; தோழர் அ. கோ. அரசு தலைமை வகிப்பார்; துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர் ஏ. டேனியல் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர்.

இக்கூட்டங்களில் தேர்தல் நிதி அளிக்கப்படும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் சர்க்கார் தொகுதியில் இந்தியாவுக்கு மொத்தம் ரூ. 41,24,00,000 மதிப்புள்ள சுரங்க இயந்திர சாதனங்கள் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

கழகச் செய்திகள்

சேலம் 19-வது வட்ட தி. மு. கழகம்

10-8-56 இரவு 10 மணிக்கு கிளைக் கழகக் கட்டிடத்தில், தோழர் கே. ஏ. இராமய்யா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் கிளைக் கழகச் சார்பில் செப்டம்பர் 17-ந் தேதியன்று 'கழகம் பிறந்த நாள்' பொதுக் கூட்டம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

புதுப்பாளையம் தி. மு. க.

15—8—56 இரவு 9 மணியளவில், புதுப்பாளையம் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம், தோழர் சி. கோவிந்தராசன் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் கே. இளங்கோ, ம. தமிழ்மணி, மு. சீனுவாசன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்ட இறுதியில் கழக உறுப்பினர்கள் பதிவு செய்வதுகுறித்துத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

தாராவி—பம்பாய் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம்

பம்பாய் தி மு கழக—தாராவி கிளையின் புதிய நிர்வாகக் குழுத் தேர்தல் கூட்டம், 15—8—56-ல், செயலாளர் தோழர் ஆரிய சங்காரன் தலைமையில் நடைபெற்றது. கடந்த கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புகள் வாசிக்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டன. 'முயற்சி' கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற தோழர்கள் மா. அண்ணாமலை சு. தங்கையா ஆகியோருக்குப் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. இறுதியில் தோழர்கள் த மு பொற்கோ, பி. எஸ் எஸ். பாண்டியன், எல். நெல்லைச்செழியன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர்கள் எஸ். தியாகராசன், மா. அண்ணாமலை, சு. தங்கையா, சி. த. மு. இரா. ஆரிய சங்காரன், சு. தங்கவேலன், எம் எஸ். கணபதி, இரா. சேது, எஸ். பாலு, புத்தரசு, இரா. வளர்மதி, சு. வள்ளிநாயகம், பி. எஸ். செல்லையா ஆகியோர் செயற் குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்ட இறுதியில் துணைச் செயலாளர் தோழர் சு. தங்கவேலன் நன்றி கூறினார்.

தில்லைவிளாகத்தில் தி.மு.க. பொதுக்கூட்டம்

கடந்த 17-ந் தேதியன்று மாலை 6 மணிக்குத் தில்லைவிளாகம் இராமர் கோவிலுக்கு முன்னால், தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர் வி. இராமநுதன் தலைமை வகித்தார். கூட்டம் துவங்குவதற்கு முன்னர் தோழர் சி பி சிற்றரசு அவர்கள் கழகக் கொடியேற்றவும், அதிர்வேட்டுகள் முழங்கின.

கூட்டத்தின்போது தோழர்கள் ப. நாகரத்தினம், இரா. நடராசன், க. தருமலிங்கம் ஆகியோர் பேசிய பின், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் நீண்டதோர் உரை நிகழ்த்தினார்.

தோழர் சிற்றரசு அவர்களுக்கு தில்லைவிளாகம், உதயமார்த்தாண்டபுரம் கிளைகள் சார்பில் கைத்தறி ஆடையும், மலர் மாலையும் அணிவிக்கப்பட்டன.

கல்லார் எஸ்டேட் தி. மு. கழகம்

15—8—56-ல், மேற்படி கிளை உறுப்பினர் கூட்டம், தோழர் வி. எம். மாணிக்கம் இல்லத்தில் தோழர் கே. பி. பிச்சைமுத்து தலைமையில் நடைபெற்றபோது, இக்கிளைக் கழக 3-வது ஆண்டு விழாவை, செப்டம்பர் மாதம் இறுதியில் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

'பிரிட்டிஷ் வைசிராய்க்குச் செய்ததுபோல இந்திய ஜனாதிபதிக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளா?'

சென்னை சர்க்காருக்கு மட்டும் ரூ. 9-இலட்சம் செலவு ஏன்?

"அந்தக் காலத்தில் சர்வாதிகார மன்னர்கள் இருந்த போதுகூட அந்த மன்னர் பவனி வந்தால் இவ்வளவு தடபுடல் நடக்காது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வைசிராய் வந்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது ஏற்பாடுகள்!

"ஏழை இந்தியாவின் ஜனாதிபதி சென்னை வந்து செல்வதால்—சென்னை சர்க்காருக்கு மட்டும் சுமார் ரூ 9 இலட்சம் செலவு; மத்திய சர்க்காருக்குச் சுமார் ரூ 30 இலட்சமாவது ஆகியிருக்கும்.

"பெரும் பணக்கார நாடான அமெரிக்காவில், ஜனாதிபதி ஒரு மாகாணத்திற்குச் சென்றால்கூட இவ்வளவு செலவு இல்லை! தடபுடல் இல்லை! இங்கிலாந்திலும்கூடக் கிடையாது! அங்கெல்லாம் ஜனாதிபதியும் மந்திரியும் சாதாரணமாகத்தான் சென்று வருகிறார்கள்.

"இந்த விஷயத்தில் மற்ற எல்லா நாடுகளையும் இந்தியா மிஞ்சிவிட்டது."

—'சோஷலிஸ்ட்': 19-8-56

புற்றுப் புண்ணை வேரறுக்க முயற்சி

அணுக் கதிர்வீச்சு படியச் செய்ய பரீட்சார்த்தத் திட்டம்

சான்பிரான்சிஸ்கோ—

பிராணிகளைப் பற்றிய ஆராய்ச்சி உள்ளிட்ட 5 ஆண்டு தவக்க ஆராய்ச்சிக்குப்பின், இங்குள்ள கலிபோர்னியா பல்கலைக் கழக மருத்துவ நிலையம் 70 மில்லியன் 'வோல்டு'கள் உள்ள எக்ஸ்-ரே கதிர் உற்பத்தி செய்யக்கூடிய 'சின்கிரோட்டானை', மனிதர்களின் புற்றுநோயைத் தீர்ப்பதற்குப் பரீட்சார்த்தமாகப் பயன்படுத்துகிறது.

புற்றுப் புண் எவ்வளவு ஆழமாக இருந்தாலும், பரீட்சார்த்தக் கதிர்வீச்சு அதில் படியச் செய்வதே இத்தகைய கருவியின் பிரதான நோக்கம்.

'சின்கிரோட்டானு'ம், அது இருக்கும் இரண்டு மாடி 'ரேடியோலாஜிக்கல்' சோதனைக்கூடமும் அமெரிக்க அணுசக்திக் குழு வழங்கிய நிதியால் 5,35,000 டாலர் செலவில் அமைக்கப்பட்டன.

கடமை உணர்வும் தியாக உள்ளமும்!

கார்வார், ஆக. 20—

பிரயாணிகள் பஸ் வண்டி ஒன்றில் ஏறிச் சென்ற சுமார் 30 பிரயாணிகளுக்கு ஏற்பட இருந்த ஒரு பெரும் விபத்து, சர்க்கார் பஸ் டிரைவரின் கடமை உணர்வாலும், தியாக உள்ளத்தாலும் தவிர்க்கப்பட்டிருக்கிறது

கடந்த 20-ந் தேதியன்று, சிர்சியிலிருந்து எல்லாப்பூர் எனும் ஊருக்குப் பிரயாணிகளை ஏற்றிச் சென்று கொண்டிருக்கையில், 27-வயதுள்ள ஜவ்லி என்ற டிரைவருக்குத் திடீரென மாரடைப்பு ஏற்பட்டிருக்கிறது. உடனே அவர், 'கை பிரேக்'கைப் போட்டு வண்டியை நிறுத்தி, அப்படியே 'ஸ்டீயரிங்'மீது சாய்ந்து அந்த நிமிடமே உயிர் துறந்துவிட்டார்.

'கை பிரேக்' போடப்பட்ட அந்தச் சர்க்கார் பஸ், ஒரு மரத்தின் மீது இலேசாக மோதி அப்படியே நின்றுவிட்டது. பிரயாணிகளும் எவ்விதக் காயமுமின்றி தப்பித்திருக்கின்றனர்!

'எண்ணவும், எடுத்துச் சொல்லவும், போராடவும் உரிமைகள் வேண்டும்'

'அவைகளே குடியரசின் உயிர்நாடிகளாகும்'

'மக்களுக்குப் பகையான சட்டங்கள் வந்தாலும் அவற்றை ஒழிக்க மக்களுக்கு வாய்ப்பு உண்டு'

'இட்லர், முசோலினி ஆட்சிகளில் குறைகளைக் களைய வழியேது?'

குடியரசின் சிறப்பு குறித்து ஈ. வெ. கி. சம்பத்

"ஐரோப்பாவில் இன்று எழில்மிக்க குடியரசுகளாகத் திகழும் நாடுகள் பல இன்று, இந்த நாடு இருக்கும் நிலையை விடக் கேவலமாக இருந்தவைதான்; பின்பு, குடியரசு அரும்பி, சிறிது சிறிதாகக் குறைகளைக் களைந்து கொண்டு எடுத்துக்காட்டான குடியரசுகளாக இன்று வளர்ந்திருப்பதை நாம் காணுகிறோம்.

"குடியரசு முறையை மேற்கொண்ட துவக்கத்தில் நாம் வழுக்கி விழலாம்; தவறுகள் இழைக்கலாம்; ஆனாலும் தொடர்ந்து நடந்தால் மக்களுக்கு நல்ல பயன்களை உருவாக்கித் தரலாம்—குறைபாடுகளை நீக்கிக் கொள்ளலாம்."

என்று, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னை—வண்ணை தியாகராயர் கல்லூரி நுண்கலை மன்றச் சார்பில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில், 'குடியரசு' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்; அவரது சொற்பொழிவின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது; தொடர்ந்து இங்கு தரப்படுகிறது:—

"குடியரசு ஆட்சிக்குப் படிப்பினை தரும் பேராசிரியப்பீடமாகப் பிரிட்டனும் பிரான்சும் இருப்பதைக் காண்கிறோம். அந்த நாடுகள் எல்லாம், இன்று குடியரசின் எழில் மிகுந்த பலன்களைத் துய்ப்பதுபோன்றே துவக்கக் காலத்திலும் துய்த்துக்கொண்டிருக்கவில்லை.

"குறைகள் பல நிரம்பிய நிலையில்தான் குடியரசு நிறுவப்பட்டது, அங்கெல்லாம்!

"அரசனின் அதிகாரங்களுக்கு எல்லையிட்டு, மிகுதியாயிருந்த அதிகாரங்களைப் பணம் படைத்த சில பிரபுக்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள் மக்கள்!

'பிறகு அந்தச் சீமான்களிடத்தில் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களையும் மெல்ல மெல்ல—படிப்படியாகப் பறித்து தங்களிடத்திலேயே வைத்துக் கொண்டிருக்கின்றனர், மக்கள்!

"அரசர்களின் அதிகாரம் குருமார்கள் கைக்குமாறி, பின் போர்க்காலத்தில் அரசனுக்கு உதவுகிற பிரபுக்கள்—சீமான்கள் ஆகியோருக்கும் கொஞ்சம் பகிர்ந்தளிக்கப்பட்டு, பின்னர் மக்கள்—அவர்களது சாமர்த்தியத்தினால், வீரத்தினால், தியாகத்தினால் அதிகாரங்கள் முழுவதையும் தங்களுக்கே பெற்றுக்கொண்டிருக்கின்றனர்.

'பின்னர் குறைகள் நீங்கிக் குடியரசைப் பொலிவுறச் செய்திருக்கின்றனர்; நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக 'குடியரசு' வளர்க்கப்பட்டிருக்கிறது.

"இதுவரை உள்ள வரலாறு, குடியரசுதான் சிறந்ததோர் அரசு முறை என்பதை நமக்குச் சொல்லியிருக்கிறதே தவிர, 'குடியரசு முறை வேண்டாதது' என்று, நமது நம்பிக்கையைத் தளர்த்துகிற கூற்றுகளைத் தந்தது இல்லை.

"ஆனால், குடியரசு முறை குறைபாடுகளைக் கொண்டது என்பதை ஒப்புகிற தைரியம்—துணிச்சல் வேண்டும்; அந்தத் துணிச்சல்தான் குடியரசின் உயிர்—அஸ்திவாரமாகும்.

"அதுமட்டுமல்ல; குடியரசு முறை குறைபாடு உடையது என்பதை நாம் அடிக்கடி நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். 'நாம் குடியரசுவாதிகள்—தவறுகள் இழைக்கக் கூடும்; தவறுகள் நிகழ்ந்துவிட்டால் அவற்றைத் திருத்திக்கொள்ள வேண்டும்,' என்ற எண்ணங்கொண்டவர்களாக இருக்கவேண்டும். 'நாம் தவறே செய்யமாட்டோம்' என்று எண்ணிக்கொள்ளக் கூடாது. 'தவறு செய்வோம்—செய்யக் கூடும்' என்ற அச்சத்துடனேயே காரியங்களைச் செய்யவேண்டும். அத்தகு எண்ணமிருப்பதுதான் பெருமை—மக்களுக்கு நன்மை தரவல்லது!

"அத்தகைய எண்ணமுறும் உள்ளத்தில்தான் குடியரசுத் தேவதை குடியேற முடியும்—கோவில் கொள்ள முடியும்!

"'குடியரசு ஆட்சியில், ஆளுவோர், தவறு நிரம்பிய—மக்களுக்குப் பகையான சட்டத்தைச் சில நேரங்களில் நிறைவேற்றி விடுகிறார்களே!'-என்று கூறுவோர் உண்டு; உண்மைதான்; ஆனால், அது போன்று நிறைவேறறப்படும் சட்டங்களை மாற்றுவதற்கும் ஒழிப்பதற்கும், குடியரசு ஆட்சியில் வழிகள் உண்டு.

"குடியரசு ஆட்சியில் எண்ணுவதற்கும், எண்ணுவதைச் சொல்லாலும் எழுத்தாலும் எடுத்துச் சொல்லுவதற்கும், அந்த எண்ண ஈடேற்றத்திற்காகப் போராடுவதற்கும் உரிமைகள் மக்களுக்குத் தரப்படுதல் வேண்டும்; குடியரசு ஆட்சியில் இந்த உரிமைகள் தரப்படுகின்றன; அவ்வாறு தரப்படாவிட்டால், குடியரசு என்பது வெறும் செத்துப் போன பிணம்தான்!

"'உங்களை உங்களுக்காக ஆளுகிறோம்'—என்று மக்களிடம் அனுமதி கேட்கிறார்கள். பெரும்பான்மை பலம் கிடைப்பதின் மூலம் மக்களிடம் கேட்டுப் பெற்ற அனுமதிப்படி ஆளுகிறார்கள்; அப்படி ஆளும்போது, பெரும்பான்மை பலத்தைக் கொண்டு கோளாறுகள் மிகுந்த சட்டம் ஒன்றை நிறைவேற்றி விடுகிறார்கள்.

"உடனே மக்கள் கூக்குரலிடுகிறார்கள்—'கூக்குரல்' என்பது, ஆளும் வர்க்கத்தினர் உபயோகிக்கும் வார்த்தை! மக்கள்கருத்துப்படி 'சட்டம் குறித்து மக்கள் விவாதிக்கிறார்கள்'—என்பதாகும்! 'ஆட்சியின் சட்டம் இன்னின்ன காரணங்களால் இன்னின்ன இடத்தில் குறைகளும், கோளாறுகளும் மலிந்தது; இது மக்கள் வாழ்வையே பறிக்கக்கூடியது; எதிர்காலச் சந்ததியை இருளில் மூழ்க வைப்பது'—என்று பிட்டுப்பிட்டுக் காட்டுகிறார்கள்—மக்கள் பிரதிநிதிகளில் சிலர்!

"ஆளுபவர்கள், 'கூக்குரல்' என்று கூறிவிட்டு சில நாட்களுக்குத்தான் வாளாவிருக்க முடியும்; பின்னர் பதில் சொல்ல முற்படுகிறார்கள்; கிளப்பப்பட்ட வாதங்களுக்கு எதிர்வாதங்களை எடுத்துரைக்கிறார்கள்; இருசாராருடைய வாதங்களையும் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு மக்கள் முடிவு கூறுகிறார்கள்—ஆளுபவர்கள் இழைக்கிற அநீதிகளை, குறைகளைக் களைந்துகொள்ள மறு அமைப்பு ஒன்றை மக்கள் நிறுவிக்கொள்ளுகிறார்கள்."

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்]

ச. வேதநாயகனர் நினைவு விழா

சென்னை, ஆக 21—

சென்னை—இராயபுரம் இலக்கிய மன்றச் சார்பில் வேதநாயகம் நினைவு விழாப் பொதுக்கூட்டம் ஒன்று இன்று மாலை 6-30 மணியளவில், இராயபுரம் பனைமரத் தொட்டியில் நடைபெற்றது.

விழாவிற்கு திரு. பரலி—சு. நெல்லையப்பர் தலைமை வகித்தார்.

தலைவர் முன்னுரைக்குப் பின் வேதநாயகத்தைப் பற்றித் தாம் எழுதிய கவிதையை கவிஞர் தியாகராசன் படித்தார்.

பின்னர் தி. மு. க. துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தோழர் சி. பி சிற்றரசு அவர்களும் வேதநாயகனாரின் தமிழ்த் தொண்டு பற்றியும், தமிழ் உணர்ச்சி பற்றியும் விரிவாகப் பேசினர். (பேச்சு பின்னர் வரும்)

தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

கழகக் கூட்டம்

★

உத்திரமேரூர்:
காந்தி திடலில்
24—8—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
சி. வி. எம். அண்ணாமலை எம்.சி.

பேசுவோர்:
அண்ணா
ஜே. ஏ. வகாப்

மதுரை மாவட்ட மாணவர்கட்கு:

"26—8—56 காலை 10 மணியளவில், மதுரை மாவட்ட தி. மு. க.—மாணவர் கிளையின் புதிய செயற்குழு நகர தி. மு. கழகப் பணிமனையில் நிறுவப்படும். மாணவத் தோழர்கள் அனைவரும் இதையே அழைப்பாகக் கொண்டு கலந்து கொள்ள வேண்டுகிறேன். மதுரை நகரில் பயிலும் வெளியூர் மாணவர்கள் அனைவரும் தவறாது பங்கு கொள்ள வேண்டுகிறேன்."

என்று, மதுரை மாவட்ட தி. மு. க—மாணவர் கிளை செயலாளர் தோழர் சாலை—மன்னன் அறிவிக்கிறார்.

அண்ணா

நிகழ்ச்சிகள்

ஆகஸ்டு
24 : உத்திரமேரூர்
25 : சென்னை-சேத்துப்பட்டு
26 : „ புளியந்தோப்பு
27 : „ தேனாம்பேட்டை

பண்டித நேருவின் 'இராஜதந்திர'த் தோல்வி குசராத்தில் நேரிடப்போகிறது!

'எதிர்க்கட்சிகள் நேருவுக்குத் தலையசைத்தாலும் மக்கள் பணியப் போவதில்லை'

'மராட்டியருக்கு அனுதாபம் காட்டாதவர்கள் குசராத்தியருக்காகக் கண்ணீர் வடிப்பதேன்?'

"குசராத்தில் காங்கிரசுக்குப் பலம் வாய்ந்த எதிர்ச் சக்திகள் கிடையாது எனலாம். அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில இடங்களில் எதிர்க்கட்சிகள் செல்வாக்குப் பெற்றிருக்கக் கூடும். ஆனால் அவையெல்லாம் காங்கிரசை எதிர்த்து நிற்கப் போதுமானவையல்ல.

"என்றாலும், இருமொழி மாநில அறிவிப்பு வந்தவுடன் கிளர்ச்சிகள் ஆரம்பித்துவிட்டன; ஆமதாபாத்தில்—பரோடாவில்—மற்ற இடங்களில் கலவரங்கள் கிளம்பியதற்கு யார் காரணம்?

"மாணவர்களும் தொழிலாளர்களும்தான் காரணம்.

"மேலும், நடைபெற்ற சில சம்பவங்களை வைத்துப் பார்க்கும்போது, இதில் இந்து மகாசபையின் செல்வாக்கு இருக்கிறதோ என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது.

"துப்பாக்கிப்பிரயோகம் நடைபெற்று இறந்தவர்களின் தொகை ஏறஏற மக்களின் வெறியும் அதிகரித்திருக்கிறது.

"மக்கள் தாங்களாகவே கிளர்ந்தெழுந்த பிறகு எதிர்க் கட்சிகள் 'நாங்களும் இருக்கிறோம்' என்று தலையைக் காட்டின.

"இங்கு துப்பாக்கிப் பிரயோகம், கண்ணீர்ப்புகை, தடியடி என்றெல்லாம் நடக்கின்றன. குசராத்தியப் பகுதியில் இருக்கின்ற வக்கீல் சங்கம் அத்தனையும், 'விசாரணை நடத்துக' என்று தீர்மானம் போட்டன.

"பம்பாயிலும் மற்றப் பகுதிகளிலும் இருந்து வெளிவருகிற அத்தனை குசராத்திப் பத்திரிகைகளும், 'துப்பாக்கிப் பிரயோகத்தை விசாரணை நடத்துக' என்று எழுதியுள்ளன.

"பம்பாயில் கலவரங்கள் நடந்தபோது, 'சுட்டது சரி' என்று வாதித்தவர்கள், இப்போது குசராத் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்திருக்கிறார்கள்.

"'துப்பாக்கிப் பிரயோகம் செய்யும்படி நேர்ந்தது துர்ப்பாக்கியவசமானது' என்று மொரார்ஜி தேசாய் கூறுகிறார்.

"இந்த அனுதாபம் மராட்டியர்களிடம் கிடையாது; குசராத்திகளிடம் உண்டு.

'குசராத்தி வியாபாரிகள்—முக்கியமாகப் பெரிய கடைக்காரர்கள் பம்பாயில் அர்த்தால் செய்துள்ளனர்.

"மராட்டியர்கள் மீது துப்பாக்கிப்பிரயோகம் நடந்தபோது இந்த அனுதாபம் காணப்படவில்லை.

'ஒரு விஷயம் மிகவும் தெளிவாகப் புரிகிறது; குசராத்தியர்—மராட்டியர் இரு பகுதி மக்களையும் இனி இணைத்து வைக்கும் முயற்சி பயனளிக்கப் போவதில்லை.

"'அது பார்லிமெண்டில் சட்டமாகிவிட்டது' என்ற ஒரு காரணத்தினால் மட்டும் குசராத்தி மக்களை ஏமாற்றிவிட முடியாது.

"எதிர்க் கட்சிகள் நேருவின் யோசனைக்குச் சிரம் தாழ்த்திவிட்டாலும்கூட மக்கள் அதற்குப் பணியப்போவதில்லை.

"பண்டித நேரு தனது 'இராஜதந்திர'த்தின் தோல்வியை மற்றுமொரு முறை குஜராத்தில் காணப் போகிறார். உண்மையில் மில் முதலாளிகள் போன்ற சமூகத்தின் சலுகை பெற்ற ஆதிக்கவர்க்கம், இன்றைய நிலையை நன்கு பயன்படுத்திக் கொள்ளப் போகின்றன.

"காங்கிரசுக்கு அக்கட்சியின் எதிர்கால நலன்களுக்கு உகந்தது எதுவோ அதுதான் பார்லிமெண்டின் சட்டமாகவும் தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நீதிகளாகவும் இருக்கவேண்டும் என்று புதியதாக ஒரு நீதி பிறப்பிக்கப்படுகிறது.

"இத்தகைய முறை தவறிய ஜனநாயகத்தைக் காப்பாற்றத் துப்பாக்கிக் குண்டுகளின் துணையும் தேவைப்படுகிறது.

"இந்த முறை தவறிய ஜனநாயகமுமதுப்பாக்கிக்குண்டுகளின் துணையும் முறியடிக்கப்படுவதில்தான் இந்திய மக்களின் எதிர்கால வாழ்வு இருக்கிறது. இந்தச் சக்திகளை முறியடிக்கும் ஆர்வம் குசராத்தி மக்களிடம் இருக்கிறதா என்றால் இன்றைய நிலையில் இல்லையென்றே கூற வேண்டியுள்ளது.

"சில சமயங்களில் எதிர்ப்பைக் காட்டிவிட்டுப் பெரிய தீமைக்குப் பணிந்துவிடும் மனோபாவம் முடிவில் தீமையையே வளர்க்கும்.

"குசராத் — மகாராட்டிர மக்கள் தங்களுக்கு நேரு இழைத்திருக்கிற தீங்கைப் புரிந்துகொண்டு அந்த மனிதனின் ஆணவத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டும்."

இவ்வாறு, 19—8—56ல் வெளியான 'சோஷலிஸ்ட்' வார இதழில் 'இரத்த வெறி கொண்ட நேருவின் ஆட்சி......' என்ற தலைப்பிட்டு எழுதப்பட்ட கட்டுரையின் ஒரு பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது.

ஓமியோபதி வைத்திய முறை அபிவிருத்திக்காக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 34,50,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.